**2, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வா.சா.ஆ.19 பவர் பத்திரத்தை சரவணன் தயார் செய்யவில்லை, மனோகர் தான் தயார் செய்தார். நான் இன்றைக்கு வரை முதல் பிரதிவாதி மனோகரை பார்க்கவில்லை. சிசிபி-ல் எப்.ஐ.ஆர்.எண்.193/2018ல் மனோகரை கைது செய்தார்கள். அவ்வாறு மனோகரை கைது செய்த போது மனோகர், 2, 3 பிரதிவாதிகள் மற்றும் என்னையும் விசாரித்தார்களா என்றால் நான் கமிஷனர் அலுவலகத்தில் இருந்தேன். சிசிபி-ல் போலீசார் மனோகரனை விசாரித்தார்கள். எனது முதல் விசாரணை சாட்சியத்தில், 9வது பத்தியில் நான் முதல் பிரதிவாதியிடம் கேட்டும் விவரம் கொடுக்கவில்லை என்று சொல்லப்பட்டுள்ளது சரியா என்றால் தவறாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. எனது பெயரில் ஆள்மாறாட்டம் செய்து பவர் பத்திரம் கொடுத்த கிருஷ்ணமூர்த்தி விலாசம் என்னவென்றால் என்னுடைய வீட்டு முகவரி தான் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த பவர் பத்திரத்தில் எண்.12/4, முத்து தெரு, சொரக்கால்பேட்டை, கடலூர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.19 பவர் பத்திரத்தில் ஆள்மாராட்டம் செய்த கிருஷ்ணமூர்த்திக்கு அடையாள அட்டையாக போலி வாக்காளர் அடையாள அட்டை கொடுக்கப்பட்டுள்ளது. போலி வாக்காளர் அட்டையில் உள்ள நம்பரும், என்னுடைய வாக்காளர் அடையாள அட்டையில் உள்ள எண்ணும் ஒன்று தான் என்றால் சரிதான். ஆனால் அதில் நிறைய அம்சங்கள் மாறுபட்டிருந்தது. என்னுடைய வாக்காளர் அட்டை மனோகரனுக்கோ, ஆள்மாராட்டம் செய்த கிருஷ்ணமூர்த்திக்கோ எப்படி கிடைத்தது என்றால் வாக்காளர் அடையாள அட்டையை போலியாக தயார் செய்துள்ளார்கள். என் வாக்காளர் அடையாள அட்டை அவர்களுக்கு தெரிய வாய்ப்பு இல்லை என்றும், நான் தான் எனது வாக்காளர் அடையாள அட்டையை வைத்து பவர் பத்திரம் தயார் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. என் பெயரிலுள்ள வா.சா.ஆ.3 கிரய பத்திரம் ஸ்டாம்பு பேப்பரில் தயார் செய்யப்படாமல், சாதாரண பாண்டு பேப்பரில் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் கூட்டுறவு சட்டப்படி அந்த சமயத்தில் கிரீன் பேப்பரில் தான் தயார் செய்வார்கள். 4வது பிரதிவாதி HDFC வங்கியிடம் அசல் பத்திரத்தை தாக்கல் செய்திருக்கிறார்களா என்றால் அசல் பத்திரம் தாக்கல் செய்யவில்லை. 4வது பிரதிவாதி HDFC வங்கியிடம் உள்ள என்னுடைய

அசல் பத்திரத்தை பற்றி காவல் துறையினர் பரிசீலனை செய்தார்கள். அவ்வாறு பரிசீலனை செய்த போது எனது ஆவணம் Duplicate பத்திரம் என்று தெரியவந்தது. நான் அசல் கிரய பத்திரம் பதிவு செய்த காலத்தில் Duplicate பத்திரம் வாங்கி அதை தான் வங்கியில் கொடுத்திருப்பேன் என்றால் அது தவறு. அவ்வாறு Duplicate பத்திரத்தை சரவணன் மற்றும் மனோகரிடம் கொடுத்துள்ளேன் என்றும், இந்த வழக்கிற்காக கொடுக்கவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சிசிபி-ல் கொடுத்த புகாரின் மீது 2, 3 பிரதிவாதிகள் உயர்நீதிமன்றத்தில் இடைக்கால மனு தாக்கல் செய்து அவர்களின் பெயரை நீக்கிவிட்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறு 2, 3 பிரதிவாதிகளின் பெயரை நீக்கியதற்கு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்த போது 22469/2019-ல் stay கொடுத்தார்கள். அந்த மேல்முறையீட்டை உச்சநீதிமன்றத்தில் விசாரணை செய்யாமலேயே தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன் பேரில் மேல்நடவடிக்கை எடுத்தேனா என்றால் உச்சநீதிமன்றத்தில் சீராய்வு மனு ஒன்றை மின்னஞ்சலில் அனுப்பினேன். அதற்கு பதில் இல்லை. அவ்வாறு மின்னஞ்சல் அனுப்பவில்லை என்றும், அனுப்பியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.19, 06.10.2016 அன்று தயார் செய்யப்பட்டது. 06.10.2016க்கு முன்னதாக 2, 3 பிரதிவாதிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் 2, 3 பிரதிவாதிகள் மீது 03.11.2018 அன்று புகார் கொடுத்தேன் என்றால் தவறு, 03.10.2018ல் புகார் கொடுத்தேன். அதிகார பத்திரம் எழுதிக் கொடுத்த 06.10.2016 முதல் புகார் கொடுத்த 03.10.2018 வரையுள்ள இடைப்பட்ட காலத்தில் 2, 3 பிரதிவாதிகளை எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியுடன் சேர்ந்து 2, 3 பிரதிவாதிகள் வஞ்சக கூட்டு சேர்ந்து கிரய பத்திரத்தை உற்பத்தி செய்ததாக நான் கட்சி செய்கிறேன். கிரய பத்திரத்தை அனுசரித்து பட்டா மாறுதல் மேற்கொள்ளப்பட்டது என்றால் இல்லை, என் பெயரில் தான் பட்டா மாறியுள்ளது. நான் 29.09.2018 அன்று தாவா சொத்தை பார்த்த போது அங்கு முதல் தளத்துடன் ஒரு வீடு இருந்தது. அந்த வீட்டிற்கு மின் இணைப்பானது 2, 3 பிரதிவாதிகள் பெயரில் இருந்தது என்றால் 26.02.2019 அன்று 2, 3 பிரதிவாதிகள் மின் இணைப்பு பெற்றார்கள். நான் முதல் விசாரணை சாட்சியத்தில் 2, 3 பிரதிவாதிகள் தங்கள் பெயரில் பட்டாவை மாற்றியிருப்பதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். பிற்பாடு அவர்கள்

மாற்றியுள்ளார்கள். ஆள்மாறாட்டம் செய்து ஆவணத்தை உற்பத்தி செய்த நபரை இந்த வழக்கில் நான் வேண்டுமென்றே சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. 4வது பிரதிவாதி வங்கியிடம் 2, 3 பிரதிவாதிகள் கடன் வாங்கியுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஆவணங்களின் அடிப்படையில் தெரியும். அது சம்பந்தமாக ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவிற்கும், HDFC வங்கிக்கும் புகார் கொடுத்தேன். 2, 3 பிரதிவாதிகள் பல்லாவரம் முனிசிபாலிட்டியில் கட்டிடம் கட்டுவதற்கு பிளான் அப்ரூவல் வாங்கினார்கள் என்றால் வாங்கவில்லை. அவ்வாறு 2, 3 பிரதிவாதிகள் பிளான் அப்ரூவல் வாங்கியது தவறு என்று உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. ஆனால் அது சம்பந்தமாக பல்லாவரம் முனிசிபாலிட்டி கமிஷனரிடம் புகார் கொடுத்தேன். 2, 3 பிரதிவாதிகள் பல்லாவரம் முனிசிபாலிட்டியில் வாங்கிய பிளானை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். வா.சா.ஆ.20 கிரய பத்திரத்தின் படி கிரய தொகை என்பது ரூபாய் 63 லட்சம் என்றால் சரிதான். அந்த பத்திரத்தின் படி மனோகர் ரொக்கமாக வாங்கியது ரூபாய் 6 லட்சம் வாங்கினாரா என்றால் ரொக்கமாக வாங்கினார். அதை தவிர ரூபாய் 2 லட்சம் காசோலையாக கொடுத்ததாக உள்ளது என்றால் சரிதான். அதை தவிர மறுபடியும் ரூபாய் 11 லட்சம் காசோலை மூலமாக கொடுத்ததாக உள்ளது என்றால் சரிதான். அதை தவிர ரூபாய் 44 லட்சம் வங்கியில் லோன் வாங்கி காசோலை மூலமாக கொடுத்ததாக உள்ளது என்றால் சரிதான். அதில் ரூபாய் 44 லட்சம் வரைஓலை எண்.831, 897 நாள் 23.03.2017 முன் தேதியிட்டு HDFC வங்கியில் கிரய பத்திரம் தேதிக்கு முன்பே கொடுக்கப்பட்டுள்ளதாக கிரய பத்திரத்தில் காட்டப்பட்டுள்ளது. 2, 3 பிரதிவாதிகள் ரூபாய் 57 லட்சத்தை வங்கி வரைவோலையாகவும், காசோலையாகவும் செலுத்தியுள்ள நிலையில் அது குறித்து நான் சிசிபி-ல் புகார் கொடுத்துள்ள நிலையில் மேற்படி வரையோலை மற்றும் காசோலைகள் எந்த வங்கியில் பணமாக்கப்பட்டது என்று நான் தெரிந்து கொண்டேனா என்றால் அந்த விவரத்தை எனக்கு சிசிபி கொடுக்கவில்லை. அது குறித்து ஆவணங்களை கேட்டபோது சிசிபி போலீசார் என்னிடம் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். சிட்டி யூனியன் வங்கியிலும் விவரம் கேட்டபோது அவர்கள் எனக்கு தரமுடியாது என்று சொல்லிவிட்டார்கள். நான் அவ்வாறு எந்த விவரமும் கேட்கவில்லை என்றும், 1ம் பிரதிவாதியோடு நான் கூட்டு சேர்ந்து மேற்படி பணத்தை பயனடைந்ததால் தான் மேற்படி

விவரங்களை நான் கேட்டு வாங்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த தேதி வரை HDFC வங்கியில் 2, 3 பிரதிவாதிகள் வங்கி கடனை ஒவ்வொரு மாதமும் செலுத்தி வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தான் எனது வாக்காளர் அடையாள அட்டையை 1ம் பிரதிவாதி மனோகரிடம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அந்த வாக்காளர் அடையாள அட்டையை பயன்படுத்தி தான் மனோகரனுடன் சேர்ந்து பவர் பத்திரத்தை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகள் அசல் வழக்கு எண்.70/2019 வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். FIR-ல் மனோகரன் மேலும் பலரை ஏமாற்றியுள்ளார். அவர்கள் யார் என்று கேட்டால் பத்திர எழுத்தர், சார் பதிவாளர், சர்வேயர் மற்றும் உயிர்வாழ் சான்று வழங்கிய மருத்துவர் ஆகியோர் ஆவர். வா.சா.ஆ.8ல் தாம்பரம் கூட்டுறவு சங்கத்தில் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான். கடலூர் பஞ்சாப் நேஷனல் வங்கியில் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.8 HDFC வங்கியில் எனது பத்திரத்தின் duplicate பத்திரத்தை கொடுத்து அடமானம் வைத்துள்ளார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)